மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 125, திரு. உ. பலராமன், இருக்கையில் இல்லை.

வினா எண் 126, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 127, டாக்டர் பிட்ரிக்ஸ் டி 'சோசா; மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

127-

MARKETING GOODS FROM SMALL ENTERPRISES RUN BY WOMEN

***19218-Dr. BEATRIX D' SOUZA :**

Will the Hon. the Minister for Rural Industries be pleased to state--

(a) Whether the Government will consider a monthly shandy to market goods of Tiny Sector entrepreneurs, especially Women ; and

(b) if so, the details thereof

முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. துரை ராமசாமி ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம் செண்பகராமன் புதூரில் தொழில்பேட்டை துவங்க தகுதியான நிலம் வட்டாட்சியாளர் உதவியுடன் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் துணை மேலாளர் தேர்ந்தெடுத்திருக்கிறார். குறைந்தபட்சம் 10 தொழில் முனைவோர் ஆரல்வாய்மொழியிலே . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். இது வினா எண் 127, குறுந்தொழில் முனைவோர்கள் பற்றியது.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) குறுந்தொழில் நிறுவனப் பொருட்களை வாங்கி சேமித்து, மாதச் சந்தையில் விற்பனை செய்வது பொருளாதார ரீதியில் சாத்தியமாகாது.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

1994 ஜனவரி 3]

Dr. Beatrix D'souza: Hon. Deputy Speaker, Sir, in the Hon. Dr. Jayalalitha's Government, the climate for women entrepreneurs is very favourable, especially for the tiny sector entrepreneurs. The credit rating for women is also very good. The Bank Managers prefer to lend money to women rather than to men because women have the commitment to pay the money back. But, the problem is that the tiny sector women entrepreneurs do not have the facility for marketing their products. Either they have to go from door to door selling their products or, in the alternative, they have to sit on pavements and sell their goods. Now, this is something that has to be seen to. If it is not possible to have shandies every month as we have in the rural areas, I would like to know whether there is any cell in the Rural Industries Department that looks after marketing, in particular.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்சமயம் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் சிட்கோ விற்பனை வரி திட்டத்தின்கீழ் பல பதிவு செய்த சிறு தொழில் சின்னஞ்சிறு தொழில்கள் டைனி செக்டார் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு விற்பனை வரி விலக்கு அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள் உள்ளாட்சி நிறுவனம் அளிக்கும் ஒப்பந்த புள்ளிகளில் பதிவு பெற்ற சிறு தொழில்களின் நிறுவனங்களின் சார்பாக பங்கேற்று வழங்காணை பெற்ற சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தகுதிக்கேற்றவாறு பகிர்ந்து அளித்து, அவர்கள் தயாரித்த பொருட்களை வழங்கு ஆணை கொடுத்த அனைத்திற்கும் வழங்கி சிறு தொழில் மேம்பாட்டிற்கான பணியைச் செய்து வருகிறது. மேலும் பல ஆண்டுகள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசு துறைகளிடமிருந்து வழங்காணை பெற்று அதை சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கி விற்பனை வரி அளித்து வருகிறது. இதன்மூலம் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் பொருட்களை வாங்குபவர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் இடையில் இணைப்பாளராக இயங்கி வருகிறது. பொருட்களின் விற்பனை பெருமளவில் இயலாத சூழ்நிலையில் தயாரிப்பாளர்களிடமிருந்து பொருட்களை வாங்கி சேமித்து விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் பெரும் தொகையை செலவு செய்ய வேண்டிவருகிறது. இந்நிறுவனம் தன்னுடைய சுய நிதியில் இயங்குவதால் சிறு தொழில் மற்றும் சின்னஞ்சிறு தொழில் தயாரிக்கும் பொருட்களை வாங்கி சேமித்து ஒரு குறிப்பிட்ட நாளில் விற்க வேண்டி ஆகும் பெரும் செலவை ஈடுகட்ட முடியாது. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி

நிறுவனத்தின் விற்பனை வரித் திட்டத்தின் அடிப்படை தத்துவமே சிறு தொழில் மற்றும் சின்னஞ்சிறு தொழில்களை, மத்திய தர தொழில்கள் மற்றும் பெரும் தொழில்களின் பிடியிலிருந்து, அரசு சலுகைகளின் மூலம் மீட்பது தான். ஆனால் சிறு தொழில் நிறுவனத்தின் பொருட்களை வாங்கி சேமித்து மொத்த சந்தையில் விற்பனை செய்வது என்பது பொருளாதார ரீதியாக சாத்தியம் ஆகாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய டாக்டர் புரட்சி தலைவி அவர்கள், பெண்கள் தொழில் முனைவோர்களாக வந்து சிறப்பாக தொழில் நடத்த வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறை காட்டி வருகின்றார்கள். இந்தப் பெண்கள் எந்தவிதமான தொழிலில் ஈடுபடுகின்றார்கள், எந்த விதமான பொருட்களை தயாரிக்கிறார்கள் என்பதையெல்லாம் பார்த்து மற்ற பெண்களும் அறிந்து தொழில் துறையில் ஆர்வம் காட்டும் வண்ணம், வருடத்திற்கு ஒரு முறையாவது, பெண்களாக முன்வந்து தயாரித்த பொருட்களையெல்லாம் கொண்டு ஒரு பொருட்காட்சியை மாநிலத்தின் தலைநகரான சென்னையில் நடத்தினால் மற்றவர்களுக்கு அது ஊக்கம் அளிப்பதாக இருக்கும்.

முற்பகல் *10.35*

மற்றவர்கள் தொழிலில் இறங்கி என்ன செய்யலாம் என்று அவர்களுக்கு ஒரு தூண்டுதலாக அமையும் வகையிலே அந்த மாதிரி வருடத்திற்கு ஒரு முறை ஒரு பொருட்காட்சியாவது நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்கள் முனைகின்ற பொருள்கள் மட்டும் அல்ல; சிறுதொழில் - சின்னஞ்சிறு தொழில்கள் மூலம் முனைகின்ற அத்தனை பொருள்களுக்கும் மாவட்ட அளவிலே பொருட்காட்சியும், கருத்தரங்கமும் நடத்த வேண்டும் என்றும் இந்த அரசு ஏற்கனவே புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்பேரிலே முடிவு எடுத்திருக்கிறது. அதன்படி கடந்த 2 மாதங்களுக்கு முன்பு திருவண்ணாமலையில் ஒரு கருத்தரங்கமும், கண்காட்சியும் நடத்தியுள்ளோம். அதே போன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடர்ந்து நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 128, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை; மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.